**<u>சுருக்கம்</u>**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – 2013–14 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு கூட்டத் தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவியருக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் கல்வி உதவித்தொகை சலுகைகள் வழங்க பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பினை ரூ.1,00,000/–லிருந்து ரூ.2,00,000/– ஆக உயர்த்தி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்</u>**
**<u>சிறுபான்மையினர் நலத்(சிந2)துறை</u>**

**அரசாணை (நிலை) எண். 53** | **நாள். 09.07.2013**
**விஜய, ஆனி 25**
**திருவள்ளுவர் ஆண்டு 2044**

**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண்.77, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(சிந)த் துறை, நாள்.11.7.2008.
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண்.110–ன் கீழ் வெளியிடப்பட்ட 09.05.2013 நாளிட்ட அறிவிப்பு.
3. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண்.டி1/2422/2013, நாள்.10.05.2013.

-----

**<u>ஆணை</u>:-**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், பள்ளிப்படிப்பு மற்றும் பள்ளி மேற்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியருக்கு கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் சலுகைகள் வழங்க பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு 2008–2009 ஆம் ஆண்டு முதல் ரூ.50,000/–லிருந்து ரூ.1,00,000/– ஆக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. 2013–14 ம் ஆண்டுக்கான வரவு–செலவு கூட்டத் தொடரின் போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் 09.05.2013 அன்று கீழ்க்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்கள்:-

> “தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ / மாணவியருக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த உதவித்தொகையை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு தற்போது ஒரு இலட்சம் ரூபாயாக உள்ளது. இது இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.23.24 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். இதன் மூலம் ஏறத்தாழ 1,05,000 பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ / மாணவியர் பயனடைவர்”

3. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை மூலம் செயற்படுத்தப்படும் பல்வேறு கல்வி உதவித்தொகை திட்டங்களில் பயனடையும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ / மாணவியரின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பினை ரூ.1,00,000/–இல் இருந்து ரூ.2,00,000/– ஆக உயர்த்தப்படும் நிலையில் அரசுக்கு தோராயமாக ரூ.23.24 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.

4. மேற்படி அறிவிப்பின் பயனாக, கூடுதலாக 1,05,000 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பயனடைவர் என்பதால் இவ்வறிவிப்பினை செயற்படுத்த பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் பரிந்துரைத்துள்ளார்.

5. மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பினை செயற்படுத்தும் விதமாகவும், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் பரிந்துரையினை ஏற்றும், 2013–2014 ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை மூலம் செயற்படுத்தப்படும் பல்வேறு கல்வி உதவித்தொகை திட்டங்களில் பயனடையும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவியரின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/– லிருந்து ரூ.2,00,000/– ஆக உயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

6. ஆண்டு வருமானம் உயர்த்தியதால் உதவித் தொகை திட்டங்களில் பயனடையும் பயனாளிகளின் கூடுதல் செலவினம் தேவையின் அடிப்படையில் 2013–14 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய மதிப்பீடு / துணை மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்ய ஏதுவாக உரிய நேரத்தில் அரசிற்கு கருத்துருவினை அனுப்புமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.35665/பி.மிபி/13, நாள்.05.07.2013 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அருள்மொழி,
அரசு முதன்மைச் செயலர்.

பெறுநர்
முதன்மைச் செயலர் / பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், சென்னை –5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை –5.
சிறுபான்மையினர் நல ஆணையர், சென்னை –2.
மாநிலக் கணக்காயர் (துணிக்கை–1), சென்னை–18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர் (துணிக்கை–2), சென்னை –35/(பெயரில்).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை –5.

**நகல் :**
நிதி (BCMBC/BG-I)த் துறை, சென்னை –9.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –9
இருப்பு கோப்பு / உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.